Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | சரவணன் | Calling: | தனியார் நிறுவனம் |
| Father's Name: | சம்பத் | Religion: | இந்து |
| Village: | வளையாம்பட்டு | Age: | 42 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 16.08.2024

SIGN :

(எதிரி ஆஜர்.)

அ.சா. 3 முதன்மை விசாரணை

1. கடந்த 28.02.2023 ம் தேதி காலை 08.00 லிருந்து 09.00 மணிக்குள் நான் வேலைக்கு போய் கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஒரு சைக்கிளில் ஒருவரும், மற்றொரு சைக்கிளில் இருவரும் என 3 பேர்கள் வளையாம்பட்டிலிருந்து கிருஷ்ணகிரி சர்வீஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஆம்பூரிலிருந்து பெங்களூர் செல்லும் சாலையில் வந்த கார் சர்வீஸ்ரோட்டிற்கு போடப்பட்டிருந்த தடுப்புச்சுவரைத் தாண்டி சைக்கிளில் சென்று கொண்டிருந்த மாணவர்களை இடித்து விட்டு பாலத்தை தாண்டி கார் மரத்தின் மேல் மோதியது.

2. கார் இடித்த மாணவர்கள் சர்வீஸ் ரோட்டிலேயே விழுந்து விட்டார்கள். அவர்கள் மூவரும் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்கள். என்ன கார் என்றால் ரெட் கலர் கார், மகேந்திரா கம்பெனி கார், அதன் பதிவெண் எனக்கு தெரியாது. அதனை யார் ஓட்டி வந்தார்கள் என்று

எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் காரை ஓட்டி வந்த டிரைவர் தான். அவர் வேகமாக காரை ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1. அசா1 ராஜ் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் ஒரே ஊர்க்காரர். கார் எவ்வளவு வேகத்தில் வந்திருக்கும் என்றால் சுமார் 120 கிலோ மீட்டர் வேகத்தில் வந்திருக்கும். அந்த காரில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதிக்கும், சாமி அண்ட்கோவிற்கும் சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவு இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக 09.00 மணிக்கு பள்ளி ஆரம்பமாகும் என்றால் சரிதான். அந்த நேரத்தில் பள்ளி மாணவர்கள் சாலையில் வேகமாக போவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். விபத்து எந்த தவறினால் நடைபெற்றது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். யாரால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் டிரைவரால் தான் விபத்து ஏற்பட்டது.

2. விபத்துக்குள்ளான காரை ஓட்டிசென்ற காரின் ஓட்டுநரால் தான் விபத்து ஏற்பட்டது. ராஜிக்கு சாதகமாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, நான் நேரடியாக பார்த்தேன். அவ்வாறு நான் நேரடியாக பார்த்திருந்தால் விபத்துக்குள்ளான காரை யார் ஓட்டினார்கள் என்றும், அந்த காரில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்றும் எனக்கு தெரியும் என்றாலும், நேரில் பார்க்காததால் தான் இந்த விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல, விபத்தை சற்று தொலைவிலிருந்து பார்த்தேன், பிறகு சம்பவ இடத்திற்கு சென்று விபத்தில் சிக்கிய மாணவர்களை பார்த்து விட்டு அவர்களின் பெற்றோர்களுக்கு தகவல் தெரிவித்தேன். இறந்த மாணவர்களை பார்த்ததால் காரில் இருந்தவர்களை நான் கவனிக்கவில்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சரவணன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D.Ravi,
Judicial Magistrate, Vaniyambadi.